தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் &
உதவிப் பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 9-4-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மக்காச்சோளத்தை இருப்பு வைத்து விற்கலாம்

இந்தியாவில், மக்காச்சோள சாகுபடி பரப்பு நடப்பாண்டில் 12.22 இலட்சம் எக்டராகும். இது கடந்த ஆண்டு சாகுபடி பரப்பான 12.63 இலட்சம் எக்டர் பரப்பை விட 3.24 சதவீதம் குறைவாகும். பீகார் மாநிலம்,மக்காச்சோள சாகுபடி பரப்பில் 32 சதவீத பங்களிப்புடன் முதவிடத்தில் உள்ளது. இதனைத் தொடர்ந்து ஆந்திர பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா ஆகியவையாகும். இம்மாநிலங்களில் மாற்று பயிர் சாகுபடியின் காரணமாக மக்காச்சோள பயிரிடும் பரப்பு கடந்தாண்டை விட குறைந்துள்ளது.

தமிழ்நாடு, மக்காச்சோளம் பயிரிடும் பரப்பில் நான்காவது இடத்தில் உள்ளது. மக்காச்சோள பயிரிடும் பரப்பானது கடந்தாண்டை விட 27 சதவீதம் அதிகரித்து நடப்பாண்டில் 1.74 இலட்சம் எக்டாராக உள்ளது. தூத்துக்குடி, விருதுநகர், திண்டுக்கல், திருநெல்வேலி, திருப்பூர் மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்கள் ரபீ மக்காச்சோளம் பயிரிடும் முக்கிய மாவட்டங்களாகும். கர்நாடகாவிலிருந்து வரும் வரத்து முடிவடைந்த நிலையில் தமிழ்நாட்டில், வரத்து துவங்கியுள்ளது. தற்போது மக்காச்சோளம் குவிண்டாலுக்கு ரூ.1,330 – 1,360 வரை விற்கப்படுகிறது. குறைந்த தரமுள்ள மக்காச்சோளம் (அதிக ஈரப்பதம் மற்றும் சேதம் அடைந்த தானியம்) சராசரி தரமான மக்காச்சோளத்தை விட விலை குவிண்டாலுக்கு ரூ.50 முதல் 100 வரை குறைவாக விற்கப்படுகிறது.

விவசாயிகள் சந்தை முடிவுகளை எடுக்க ஏதுவாக, கடந்த 14 ஆண்டுகளாக உடுமலைப்பேட்டை ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவிய மக்காச்சோளத்தின் விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு

மையத்தில் இயங்கி வரும், வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் ஆராய்ந்தது.

விலை மற்றும் வர்த்தக ஆய்வுகளின் அடிப்படையில் தரமான மக்காச்சோளத்தின் விலை (ஜுன்–ஜுலை 2015ல்) குவிண்டாலுக்கு ரூ.1420 - 1450 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் அறுவடை செய்த மக்காச்சோளத்தை சேமித்து வைத்து ஜுன் 2015ல் விற்க பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி - 0422 -2431405

<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
சிறு தானியங்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் - 0422-2450507

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்